M.C.NO.12/2021 Page No.
DATE:12.09.2023.
P.W.1-GOMATHI, W/O.KUMARESAN

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

2021 ஆம் வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து இப்போது வரையில் ஆயுஸ்மான் மருத்துவ காப்பீடு அட்டையை பயன்படுத்தி நானும் எனது குழந்தையும் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். நான் எனது மனுவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் உள்ள கேன்டீனில் வேலை செய்து வரும் விவரத்தையும் மாதம் ரூ.12 ஆயிரம் வருமானம் பெறும் விவரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் மனு தாக்கல் செய்தபோது நான் வேலைக்கு செல்லவில்லை என்பதால் மேற்படி விவரத்தை தெரிவிக்கவில்லை. 2 மாதங்களுக்கு முன்பாக மேற்படி வேலையை விடும்வரை நான் வேலைக்கு சென்றுக்கொண்டு தான் இருந்தேன் என்றால் 4 நாட்கள் மட்டுமே வேலைக்கு சென்றேன். எனக்கு குழந்தை பிறந்த சமயத்தில் எதிர்மனுதாரர் எனது வீட்டிற்கு வந்து என்னிடம் கடந்த 06.02.2021 அன்று ரூ.15 ஆயிரம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னிடம் பணம் கொடுக்கவே இல்லை.

காவல் துறையில் எதிர்மனுதாரரின் மீது நிறைய புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் அதில் எந்த புகாரின் மீதும் எதிர்மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் அளித்த புகார்களில் உண்மை தன்மை இல்லை என்ற காரணத்தினால் தான் எதிர்மனுதாரர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்களை நான் அறிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பிரமிகா என்ற இன்சுரன்ஸ் காப்பீட்டை 2 ஆம் மனுதாரரான எனது மகளின் மீது எதிர்மனுதாரர் ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் பி.பி.எப்.கணக்கு தொடங்கி அதில் எனது மகளின் மீது மாதம் ரூ.3,000/- வீதம் 21.08.2021 முதல் நாளது தேதி வரை செலுத்தி வருகிறார் என்றாலும் சுகன்யா சம்பிரித்தி கணக்கு தொடங்கி அதிலும் எனது மகளின் மீது மாதம் ரூ.2,000/- வீதம் செலுத்தி வருகிறார் என்றாலும் கடந்த 20.09.2021 அன்று 2 ஆம் மனுதாரரான என் மகளின் மீது ரூ.39,450/-க்கு வைப்பு நிதி செலுத்தியுள்ளார் என்றாலும் மேற்படி சேமிப்புகளை எனது மகள் மீது எதிர்மனுதாரர் ஏற்படுத்தி பணம் செலுத்தி வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. பிரமிகா என்ற இன்சுரன்ஸ் காப்பீட்டை செலுத்தி வரும் விவரம் மட்டுமே எனக்கு தெரியும்.

எவ்வித நியாயமான காரணமும் இல்லாமல் நான் எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றாலும் எனது மகளுக்கு எதிர்மனுதாரரிடமிருந்து கிடைக்க வேண்டிய அன்பு மற்றும் பாதுகாப்பை கிடைக்கவிடாமல் தடுத்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய மாத வருமானம் மற்றும் வங்கி கணக்கு விவரத்தை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளுடன் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH Date: 2023.09.12 18:43:15 +0530

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.